மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவிற்கு சம்பந்தம் இல்லாமல் போகிறீர்கள். அரசு ஊழியர்களுடைய நடத்தை பற்றி, ஆற்றல் பற்றி பேசக்கூடாது. உங்களுடைய துணைக் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் செங்கத்தில் தயவுகூர்ந்து அரசு ஊழியர்களுக்கு விரைவில் வீடு கட்டித் தந்து, ஒரு இன் சென்டிவ்வாக செங்கத்திற்குத் தரும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இதை அரசு ஆராயுமா என்று அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணைப்படி அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டங்களைப் பொறுத்த வரை, அதனைச் செயல்படுத்த மாவட்டத் தலைமையிடமும், வருவாய் கோட்டத் தலைமையிடமும் மட்டும்தான் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன. அரசு அலுவலர்கள் குடியிருப்பு கட்ட அரசுக்குச் சொந்தமான நிலம், மற்றும் மாவட்ட ஆட்சியருடைய பரிந்துரை இருக்குமாயின், அரசு இதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 135, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

135—

திருச்சி நகரில் பழுதடைந்த சத்துணவுக் கூடங்களைச் செப்பனிடுதல்.

*1796 டாக்டர் ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பார் :

(அ) திருச்சி நகரின் பல்வேறு பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் (I.C.D.S.) கீழ் இயங்கி வரும் சத்துணவுக்கூடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

1992 மார்ச் 9]

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரில் ஐ.சி.டி.எஸ். திட்டத்தின் கீழ் சுமார் 200 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் முழுவதும் பழுதுபட்ட நிலையில் சுமார் 60 மையங்கள் உள்ளன. மேற்கூரை மற்றும் தரைத்தளம் பழுதடைந்த நிலையில் சுமார் 40 மையங்கள் உள்ளன. இவற்றின் சீரமைப்புப் பணிகளை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள், திருச்சி மாவட்ட ஆட்சியர் முன்னிலையில், தனியார் நிறுவனங்கள், தொழில் அதிபர்கள் மற்றும் சேவை நிறுவனங்களிடம் ஒப்படைத்து பல மாதங்கள் ஆகியும் சீரமைப்பு வேலை துவங்கப் படாமல் இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் ஏறக் குறைய 1968 ஐ.சி.டி.எஸ். சத்துணவு மையங்கள் இருக்கின்றன. இதிலே பழுதுபட்டிருப்பவை 757. இதில் பழுதுபார்க்கப்பட் டவை 306. இதற்கு ஏற்பட்ட செலவு ரூ. 10.14 இலட்சம். மீதம் உள்ளவைகளை விரைவாக, துரிதமாக நடவடிக்கை எடுத்து அதன் பழுதுபார்ப்புப் பணிகளை அரசு விரைவில் நடைமுறைப்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையத்திற்கு வரும் குழந்தைகள் அமர்ந்து உண்பதற்கும், படிப்பதற்கும், கோடைகாலத்தின் கொடுமையிலிருந்து குழந்தைகளைக் காப்பதற்கும் இந்தப் பழுது பார்க்கும் பணிகளை விரைந்து முடித்துத் தர அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வேகமான நடவடிக்கை எடுத்துத்தான் இந்த 306 மையங்களை வேகமாகச் சீர்திருத்தி இருக்கிறது. நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் இருக் கின்ற காரணத்தால் எவ்வளவு வேகமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு வேகமா அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 136, திரு. வே. தம்புசாமி. இருக்கையில் இல்லை.

வினா எண் 137, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.